OS.No.310/2013 – 07.03.2024

DW1 – கந்தசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 13 முதல் 17, மற்றும் 19 முதல் 21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார். வாதி கோரிய படி பரிகாரம் வழங்குவதற்கு எனக்கு சம்மதம் என்று பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. இந்த வழக்கை பற்றி எனக்கு தாவா வழக்கில் அழைப்பாணை வருவதற்கு முன்னரே எனக்கு தெரியும் என்றால் சரி. நானும் வாதியும் வழக்கறிஞர் சிவராமன் என்பவரை வழக்கு சம்மந்தமாக அனுகினோம் என்றால் சரி. அவர் மூலமாகதான் இந்த வழக்கில் ஆஜராகி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் கவிதா என்பவர் மூலம் ஆஜராகி உள்ளேன். வழக்கறிஞர் கவிதா, வழக்கறிஞர் சிவராமனின் ஜூனியர் வழக்கறிஞர் என்றால் எனக்கு தெரியாது. நானும் வாதியும் ஒரே வழக்கறிஞர் அலுவலகத்திற்குதான் வழக்கு சம்மந்தமாக சென்றுவருகிறோம் என்றால் சரி. இந்த வழக்கு 1960 ம் ஆண்டு விலைக்கு வாங்கிய 4 நபர்களின் கிரயப்பத்திரத்தின் அடிப்படையில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த 4 நபர்களில் நான்

முத்து என்கிற பெரியாகவுண்டரின் வகையராவை சார்ந்தவர் என்றால் சரி. முத்து என்கிற பெரியாகவுண்டருக்கு 2 மகன்கள், 5 பெண்கள் என்றால் சரி. முத்து என்கிற பெரியாகவுண்டருக்கு செங்கோட்டு வேலும், ராமசாமியும் ஆண்வாரிசுகள் என்றால் சரி. அந்த 5 பெண்கள், பாப்பா, சின்னம்மா, சின்னாயி, அம்மாயி, மற்றும் ஒருவர் என்றால் சரி. இந்த 5 பெண் வாரிசுகளையோ அல்லது அந்த பெண் வாரிசுகளில் இறந்தவர்களின் வாரிசுகளையோ இந்த வழக்கில் வாதி தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. நானும் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ஆண் வாரிசுகளுக்கு மட்டும் பாகம் உள்ளது என்று நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன். அது எந்த வருடத்திலிருந்து ஆண் வாரிசுகளுக்கு மட்டும் பாகம் உள்ளது என்று சொல்கிறேன் என்றால் 1960 லிருந்து ஆண் வாரிசுகளுக்கு மட்டும் பாகம் என்று சொல்கிறேன். 1956 வது இந்து வாரிசுரிமை சட்டப்படி தந்தையின் சொத்தில் மகள்களுக்கும் மகன்களுக்கு சம்மாக சுயார்ஜித சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து மொத்தம் எவ்வளவு விஸ்தீர்ணம் என்றால் 24 ஏக்கர். வழக்கு சொத்தில் உள்ள அனைத்து நிலங்களும் 1960 வருட பத்திரத்தில் காணப்பட்டிருந்தது என்றால் சரி. 1960 ம் ஆண்டு மூலப்பத்திரத்தில் காணாத சர்வே எண். 115/6 ஏ, 115/6 பி ல் கண்ட நிலங்களும்

சேர்க்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

மேற்படி மூல ஆவணத்தின் உரிமையாளரான முத்து என்கிற பெரியாகவுண்டரின் வாரிசுகள் பெயரில் தனித்தனியாக பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவை எனது தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காரணம் நான் வழக்கை தாக்கல் செய்யவில்லை. தனித்தனியாக பட்டா இருப்பவர்கள் தனித்னியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரி. எங்களுக்கு இடையேயான பிரச்சனை, பிரிந்த பாகத்திற்கு தடம் பிரச்சனையாக உள்ளது என்றால் சரி. தடத்திற்கு என்று தனியாக நான் வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எனக்கு பிரிந்த நிலத்திற்கு உரிமை கோருவது என் நிலத்திற்கு தடம் வேண்டும் என்பதுதான் என்றால் சரி. தற்போது சாட்சி 4ல் ஒரு பாகமும் தடமும் வேண்டும் என்று கூறுகிறார். நான் தனியாக அனுபவம் செய்து வரும் நிலம் 4ல் ஒரு பங்கு சமமாக உள்ளதா என்றால் இல்லை, குறைவாக உள்ளது. அந்த குறைவான நிலம் யாரிடம் உள்ளது என்றும், அந்த நிலத்தை எவ்வாறு பெறுவது என்று உரிமை குறித்து நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என்னுடைய பாகத்திற்கு தனியாக நீதிமன்ற கட்டணம் செலுத்தி உள்ளேனா என்றால் செலுத்தி உள்ளேன். நான் சேர்க்க வேண்டிய தரப்பினர்களை சேர்க்காமல் நான் கேட்கும் எதிர்

கோருரிமை நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1960 வருட பத்திரத்தில் வாதியானவர் நல்லிகவுண்டர் மகன் செங்கோட கவுண்டர் வகையரா என்றால் சரி. வாதியின் வகையராவும், மற்றொரு நல்லாகவுண்டரும் சேர்ந்து 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான அர்த்தநாரி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டருக்கு 5.9.1960ல் பாதி சொத்தை விற்றுவிட்டனர் என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. வாதி மற்றும் மற்ற பிரதிவாதிகளின் பெயரில் யார் யாருக்கு என்னென்ன சர்வே எண்ணில் எவ்வளவு நிலம் தனித்தனி பட்டாவாகி அனுபவத்தில் இருந்து வருகிறது என்று னக்கு தெரியாது என்றால் சரி. 24 ஏக்கர் நிலம் என்னென்ன சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.109, 111. அதன் துணை பிரிவுகள் தெரியாது.

தாவா சொத்தில் எத்தனை பேர்களின் பெயரில் தனிபட்டா உள்ளது என்று தெரியாது என்றால் சரி. மற்ற 3 தரப்பினர்கள் ஒருவருக்கொருவர் எந்தெந்த நிலங்களை 1960க்கு பின்னிட்டு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய எதிர் கோருரிமை வழக்கிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ 5/20 பாகம் கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய பெண் வாரிசுகளை தரப்பினராக சேர்க்காததால் எனக்கு பாகம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. நானும் வாதியும் சேர்ந்து கூட்டு சதி செய்து இந்த பொய்யான

வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2005 ம் ஆண்டு வாரிசுரிமை திருத்த சட்டப்படி பிரிக்கப்படாத சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உள்ளது என்ற விவரத்தை நான் என்னுடைய வழக்கில் தெளிவாக காண்பிக்காமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1970 க்கு முன்னே வாய்மூலமாக மேற்படி மூல 4 நபர்களுக்குள் பாகம் ஏற்பட்டு அவர்களுக்குள் அப்பாகம் இறுதி செய்யப்பட்டு 1984 லிலேயே அவரவர்களுக்கு தனித்தனி பட்டாவாகி அவரவர்களின் வாரிசுகள் தனி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில்தான் எனது வகையராவிற்கும் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1984 ல் எங்கள் வகைராவிற்கு தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றால் சரி. 1984 ல் எங்களுக்கு தனி பட்டா வழங்கப்பட்டபிறகு அந்த பட்டா நிலங்களின் அனுபவமோ அல்லது கொடுக்கப்பட்டா பட்டாவோ சரியில்லை என்று நான் வருவாய் துறைனரிடம் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரி. எனது வகையராவிற்கு பாத்தியப்பட்ட 4 ல் ஒரு பங்கு சொத்தை 1974 லிருந்து அனுபவம் செய்து வருவதால் மீண்டும் நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. ஏற்கனவே பிரித்து கொடுக்கப்பட்ட பாகத்தின் அளவு குறைவு என்று வழக்குரையில் பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு 4 ல் ஒரு பாகம் பெறுவதற்கு

தகுதியில்லை என்றும் வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து தெளிவான கரங்களுடன் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றும், எனவேதான் நானும், வாதியும் எங்களுடைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும் ஏற்கனவே பிரிக்கப்பட்டு 60 ஆண்டுகளுக்கு மேலாக அவரவர்கள் தனி அனுபவத்தில் இருந்து வரும் நிலையில் புதிதாக பாகம் கோருவதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 65 ஆண்டு காலத்தில் வழக்கு சொத்து சம்மந்தமாக ஏற்பட்ட வில்லங்கம் குறித்தும் அது சார்ந்த உரிமைகள் குறித்து நீதிமன்றத்திற்கு நான் தெளிவாக எடுத்து கூறாமல் மறைப்பதால் உண்மையை மறைத்தல் என்ற சட்டத்தின் அடிப்படையில் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/– S.Sumathy,

Principal District Judge, Salem.